RSYF

## சனாதன பாரதம் நிலைநாட்ட சமஸ்கிருதம் - இந்தி திணிப்பு!

கடந்த ஆண்டு இறுதியில் அமித்ஷா தலைமையிலான நாடாளுமன்ற குழு அறிக்கை ஒன்றை குடியரசுத் தலைவரிடம் அளித்து உள்ளது. அந்த அறிக்கை பல்வேறு தேசிய, இன மொழிகளின் உரிமைகளை குழிதோண்டிப்புதைத்து விடும். அந்த அறிக்கை சட்டமாக்கப்பட்டால் ஒன்றிய அரசு வேலைக்கான தேர்வுகள் அனைத்தும் இந்தி மொழியில்தான் நடத்தப்படும். ஒன்றிய அரசுக்கும் மாநிலங்களுக்கும் இடையிலான தொடர்பு மொழி இந்தி மட்டுமே என மாற்றப்படும். இப்படி பல்வேறு அநீதியான அம்சங் களைக் கொண்டுள்ள அந்த அறிக்கை, முழுக்க முழுக்க பல்வேறு தேசிய இனங்களுக்கும், இனங்களின் மொழி உரிமைக்கும் எதிரானதாக உள்ளது. இதைத் தற்போது தமிழகம் மட்டுமல்லாமல் பல்வேறு மொழிகளைப் பேசும் மக்களும் எதிர்த்து வருகின்றனர்.

இந்த அறிக்கை சமஸ்கிருதம்- இந்தி திணிப்பில் மோடி அரசின் முதல். நடவடிக்கை அல்ல. சமஸ்கிருதம் பல்கலைக்கழகம், சமஸ்கிருதம்- இந்திக்கு அதிக நிதி ஒதுக்கீடு என தொடர்ந்து தனது திட்டத்தை அமல்படுத்த முயல்கிறது இன்னொருபுறம், காசி தமிழ் சங்கம், திருக்குறளை மேற்கோள் காட்டுவது ஆகியவற்றின் மூலம் தமிழ் மீது பற்று கொண்டவராக நாடகமாடுகிறது ஆர்.எஸ்.எஸ் சங் பரிவார் கும்பல்.

சமஸ்கிருதம்- இந்தி திணிப்பது என்பது அந்த மொழிகளின் அடிப்படையில் ஒற்றை கலாச்சாரத்தை, பார்ப்பன மேலாதிக்கத்தை நிறுவவும், பல்வேறு தேசிய இன மொழி, கலாச்சாரங்களை, அடையாளங் களை அழித்தொழிக்கவுமான ஆர்.எஸ்.எஸ்.சின் இந்து- இந்தி- இந்தியா இந்து ராஷ்டிரத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

## சாதி ஆதிக்கத்தில் கொழுத்தவர்களுக்கு 10% இட ஒதுக்கீடு!

கடந்த 2019 ஆம் ஆண்டு ஒன்றிய மோடி அரசு அரசியலமைப்புச் சட்டத்தில் கொண்டுவந்த 103 வது சட்ட திருத்தம் பொருளாதார ரீதியான நலிவடைந்த வர்களுக்கு இட ஒதுக்கீடு அளிப்பதற்கு வழிவகை செய்துள்ளது.

ஈராயிரம் ஆண்டு காலமாக மனுநீதியின் பேரால், பார்ப்பனிய மேலாதிக்கத்தால் சூத்திரன் என்றும், பஞ்சம் என்றும் ஒடுக்கப்பட்ட வந்த பெரும்பான்மை உழைக்கும் மக்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் குறைந்தபட்சம் பிரதிநிதித் துவத்தையாவது உறுதிப்படுத்த வந்தது இட ஒதுக்கீடு. இது ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்தாலும், நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் 1980 களில் மண்டல் கமிஷன் பரிந்துரைகளின் அடிப்படையில் உயர்கல்வியிலும் அரசு துறையிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் இட ஒதுக்கீடு உறுதி செய்யப்பட்டது. அதற்கு எதிராக அப்போதே RSS - ABVP கும்பல் உயர் சாதி லும்பன் கும்பலை திரட்டி போராட்டங்களில் ஈடுபட்டது; கலவரங்களை செய்தது. 1991 இல் அமலான இட ஒதுக்கீடு அரசு உயர் கல்வி நிறுவனங்களிலும் அரசு உயர் பதவியிலும் இன்னும் பிரதிபலிக்க கூட துவங்கவில்லை அதற்குள்ளாகவே அதனை ஒழித்துக் கட்டும் விதமாக தற்போது இந்த பொருளாதார ரீதியில் நலிவடைந்த' உயர் சாதியினருக்கான இட ஒதுக்கீட்டை அமல் படுத்தியுள்ளது.

அந்த உயர் சாதி ஏழை களுக்கு வைக்கப்பட்ட வரம்பும் கூட மிகவும் அயோக்கியத் தனமானது. ஆண்டுக்கு 8 லட்சம் வருமானம், 5 ஏக்கர் நிலம், 1000 சதுர அடி வீடு இவையெல்லாம் இருப்பவர்கள் ஏழைகளாம்! நாள் வருமானம் 33 ரூபாய் என்றால் அவர் வறுமைக்கோட்டுக்கு மேலே உள்ளவர் என்ற இந்திய வரையறையுடன் இதை ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த அரிய வகை ஏழைகளின் கொழுத்த நிலை புரியும்.

உண்மையில் ஒன்றிய மோடி அரசால் கொண்டு வரப்பட்டது பொருளாதார ரீதியாக நலிவடைந்தவர் களுக்கான இட ஒதுக்கீடு அல்ல; சாதி ஆதிக்கத்தில் கொழுத்தவர்களுக்கான இட ஒதுக்கீடு. 2000 ஆண்டு காலமாக பார்ப்பனிய வர்ணாசிரம (சனாதன) தர்மத்தால் பெரும்பான்மை உழைக்கும் மக்களை சாதிய ரீதியாக ஒடுக்கியவர்களுக்கான இட ஒதுக்கீடு- மாபெரும் அநீதி. மீண்டும் மனுநீதி ஆட்சியை நிலைநாட்டும் சதி.

## மொழி, இட ஒதுக்கீடு போராட்டம்: தமிழ்நாடே வழிகாட்டி!

மொழியுரிமைக்காகவும் இட ஒதுக்கீடு க்காகவும் பெரும் போராட்டத்தை நடத்திய வரலாறு கொண்டது தமிழ்நாடு. அந்த வகையில் இந்திய மக்கள் இருபெரும் தாக்குதல்களாக கொடுக்கப்பட்டுள்ள சமஸ்கிருதம்- இந்தி திணிப்பையும், உயர்சாதி யினருக்கான 10% இட ஒதுக்கீட்டையும் முறியடிக்கும் தமிழ்நாடே முன்னிற்க வேண்டும்.

இந்த முறை...

**தமிழ்நாட்டு மாணவர்களும், இளைஞர்களும் மொழியுரிமை, இட ஒதுக்கீடு உரிமைக்கான போராட்டத்தை கார்ப்பரேட்- காவி பாசிசத்தை எதிர்க்கும் போராட்டமாக விரிவுபடுத்துவோம்!**

**மக்கள் கலை இலக்கியக்கழகம்**
**புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி**
தமிழ்நாடு

தொடர்புக்கு:
95007 92976
f rsyftn2021





ஜனவரி-25

# மொழிப் போர் தியாகிகள் நினைவை நெஞ்சில் ஏந்துவோம்!

## சமஸ்கிருதம் - இந்தி திணிப்பு!

**மொழிப்போர் தியாகிகள்** கீழப்பலூர் **சின்னச்சாமி,** விராலிமலை **சண்முகம் வீரவணக்கம் அஞ்சலி செலுத்துதல்!**

**மாலை 3 மணி** தென்னூர் உழவர் சந்தை, திருச்சி




## பார்ப்பன உயர்சாதியினருக்கான 10% இட ஒதுக்கீட்டை முறியடிப்போம்!

**திருச்சியில்**

# கருத்தரங்கம்

**ம.க.இ.க வின்**
புரட்சிகர கலைநிகழ்ச்சி

25.01.2023 மாலை 5 மணி புத்தூர் சண்முகா திருமண மண்டபம், புத்தூர், திருச்சி.

அன்பார்ந்த மாணவர்களே, இளைஞர்களே,

ஜனவரி 25, மொழிப் போர் தியாகிகள் நினைவு நாள். தமிழ் வாழ்க! இந்தி ஒழிக! என்று முழங்கியபடி தனது உயிரை தமிழுக்கும் உடலை தீக்கும் கொடுத்த மொழிப்போர் தியாகி கீழப்பழுவூர் சின்னசாமியின் நினைவு நாள்.

1930களில் இந்தியை திணிக்க ராஜாகோபாலாச்சாரி முயன்ற போதும், 1965யில் இந்தியை நாட்டின் ஒரே ஆட்சி மொழியாக திணிக்க இந்திய ஒன்றிய அரசு திணிக்க முயன்ற போதும் தமிழ்நாடு போர்க்கோலம் பூண்டது. குறிப்பாக, 1965யில் தமிழ்நாட்டு மாணவர்கள் பள்ளி, கல்லூரிகளைவிட்டு வீதியில் இறங்கினர். ஒன்றிய, மாநில அரசுகளின் அடக்குமுறைகளை எதிர்கொண்டனர்; உயிர்த்தியாகம் செய்தனர். இந்தியை திணிக்கும் ஒன்றிய அரசின் முயற்சியை முறியடித்தனர். தங்கள் போராட்டத்தில் வெற்றி பெற்றனர். தமிழ்நாட்டின் மொழிப்போரில் நடராசன், தாளமுத்து தொடங்கி சின்னசாமி, இராசேந்திரன் வரை பலர் உயிரிழந்துள்ளனர். அந்த தியாகிகள் நமக்கு விட்டுச் சென்றுள்ள செய்தி மொழிக்காக போராடு, உரிமைகளை பாதுகாக்க போராடு, அடக்குமுறைக்கு அஞ்சாதே என்பது தான்.

ஒன்றிய மோடி அரசு நாம் போராடி பெற்ற மொழி உரிமையையும், இட ஒதுக்கீடு உரிமையையும் மொத்தமாக ஒழிக்கப்பார்க்கும் காலத்தில் மொழிப்போர் தியாகிகளின் போராட்ட உணர்வும் தீரமும் நம்மிடம் பற்றிப் படர வேண்டியுள்ளது.




**ம.க.இ.க**

**பு.மா.இ.மு**

**தமிழ்நாடு**

RSYF

### சனாதன பாரதம் நிலைநாட்ட சமஸ்கிருதம் - இந்தி திணிப்பு!

கடந்த ஆண்டு இறுதியில் அமித்ஷா தலைமையிலான நாடாளுமன்ற குழு அறிக்கை ஒன்றை குடியரசுத் தலைவரிடம் அளித்து உள்ளது. அந்த அறிக்கை பல்வேறு தேசிய, இன மொழிகளின் உரிமைகளை குழிதோண்டிப்புதைத்து விடும். அந்த அறிக்கை சட்டமாக்கப்பட்டால் ஒன்றிய அரசு வேலைக்கான தேர்வுகள் அனைத்தும் இந்தி மொழியில்தான் நடத்தப்படும். ஒன்றிய அரசுக்கும் மாநிலங்களுக்கும் இடையிலான தொடர்பு மொழி இந்தி மட்டுமே என மாற்றப்படும். இப்படி பல்வேறு அநீதியான அம்சங் களைக் கொண்டுள்ள அந்த அறிக்கை, முழுக்க முழுக்க பல்வேறு தேசிய இனங்களுக்கும், இனங்களின் மொழி உரிமைக்கும் எதிரானதாக உள்ளது. இதைத் தற்போது தமிழகம் மட்டுமல்லாமல் பல்வேறு மொழிகளைப் பேசும் மக்களும் எதிர்த்து வருகின்றனர்.

இந்த அறிக்கை சமஸ்கிருதம்– இந்தி திணிப்பில் மோடி அரசின் முதல். நடவடிக்கை அல்ல. சமஸ்கிருதம் பல்கலைக்கழகம், சமஸ்கிருதம்– இந்திக்கு அதிக நிதி ஒதுக்கீடு என தொடர்ந்து தனது திட்டத்தை அமல்படுத்த முயல்கிறது இன்னொருபுறம், காசி தமிழ் சங்கம், திருக்குறளை மேற்கோள் காட்டுவது ஆகியவற்றின் மூலம் தமிழ் மீது பற்று கொண்டவராக நாடகமாடுகிறது ஆர்.எஸ்.எஸ் சங் பரிவார் கும்பல்.

சமஸ்கிருதம்– இந்தி திணிப்பது என்பது அந்த மொழிகளின் அடிப்படையில் ஒற்றை கலாச்சாரத்தை, பார்ப்பன மேலாதிக்கத்தை நிறுவவும், பல்வேறு தேசிய இன மொழி, கலாச்சாரங்களை, அடையாளங் களை அழித்தொழிக்கவுமான ஆர்.எஸ்.எஸ்.சின் இந்து– இந்தி– இந்தியா இந்து ராஷ்டிரத் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

### சாதி ஆதிக்கத்தில் கொழுத்தவர்களுக்கு 10% இட ஒதுக்கீடு!

கடந்த 2019 ஆம் ஆண்டு ஒன்றிய மோடி அரசு அரசியலமைப்புச் சட்டத்தில் கொண்டுவந்த 103 வது சட்ட திருத்தம் பொருளாதார ரீதியான நலிவடைந்த வர்களுக்கு இட ஒதுக்கீடு அளிப்பதற்கு வழிவகை செய்துள்ளது.

ஈராயிரம் ஆண்டு காலமாக மனுநீதியின் பேரால், பார்ப்பனிய மேலாதிக்கத்தால் சூத்திரன் என்றும், பஞ்சம் என்றும் ஒடுக்கப்பட்ட வந்த பெரும்பான்மை உழைக்கும் மக்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் குறைந்தபட்சம் பிரதிநிதித் துவத்தையாவது உறுதிப்படுத்த வந்தது இட ஒதுக்கீடு. இது ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்தாலும், நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் 1980 களில் மண்டல் கமிஷன் பரிந்துரைகளின் அடிப்படையில் உயர்கல்வியிலும் அரசு துறையிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் இட ஒதுக்கீடு உறுதி செய்யப்பட்டது. அதற்கு எதிராக அப்போதே RSS - ABVP கும்பல் உயர் சாதி லும்பன் கும்பலை திரட்டி போராட்டங்களில் ஈடுபட்டது; கலவரங்களை செய்தது. 1991 இல் அமலான இட ஒதுக்கீடு அரசு உயர் கல்வி நிறுவனங்களிலும் அரசு உயர் பதவியிலும் இன்னும் பிரதிபலிக்க கூட துவங்கவில்லை அதற்குள்ளாகவே அதனை ஒழித்துக் கட்டும் விதமாக தற்போது இந்த பொருளாதார ரீதியில் நலிவடைந்த' உயர் சாதியினருக்கான இட ஒதுக்கீட்டை அமல் படுத்தியுள்ளது.

அந்த உயர் சாதி ஏழை களுக்கு வைக்கப்பட்ட வரம்பும் கூட மிகவும் அயோக்கியத் தனமானது. ஆண்டுக்கு 8 லட்சம் வருமானம், 5 ஏக்கர் நிலம், 1000 சதுர அடி வீடு இவையெல்லாம் இருப்பவர்கள் ஏழைகளாம்! நாள் வருமானம் 33 ரூபாய் என்றால் அவர் வறுமைக்கோட்டுக்கு மேலே உள்ளவர் என்ற இந்திய வரையறையுடன் இதை ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த அரிய வகை ஏழைகளின் கொழுத்த நிலை புரியும்.

உண்மையில் ஒன்றிய மோடி அரசால் கொண்டு வரப்பட்டது பொருளாதார ரீதியாக நலிவடைந்தவர் களுக்கான இட ஒதுக்கீடு அல்ல; சாதி ஆதிக்கத்தில் கொழுத்தவர்களுக்கான இட ஒதுக்கீடு. 2000 ஆண்டு காலமாக பார்ப்பனிய வர்ணாசிரம (சனாதன) தர்மத்தால் பெரும்பான்மை உழைக்கும் மக்களை சாதிய ரீதியாக ஒடுக்கியவர்களுக்கான இட ஒதுக்கீடு– மாபெரும் அநீதி. மீண்டும் மனுநீதி ஆட்சியை நிலைநாட்டும் சதி.

### மொழி, இட ஒதுக்கீடு போராட்டம்: தமிழ்நாடே வழிகாட்டி!

மொழியுரிமைக்காகவும் இட ஒதுக்கீடு க்காகவும் பெரும் போராட்டத்தை நடத்திய வரலாறு கொண்டது தமிழ்நாடு. அந்த வகையில் இந்திய மக்கள் இருபெரும் தாக்குதல்களாக கொடுக்கப்பட்டுள்ள சமஸ்கிருதம்– இந்தி திணிப்பையும், உயர்சாதி யினருக்கான 10% இட ஒதுக்கீட்டையும் முறியடிக்கும் தமிழ்நாடே முன்னிற்க வேண்டும்.

இந்த முறை...

**தமிழ்நாட்டு மாணவர்களும், இளைஞர்களும் மொழியுரிமை, இட ஒதுக்கீடு உரிமைக்கான போராட்டத்தை கார்ப்பரேட்– காவி பாசிசத்தை எதிர்க்கும் போராட்டமாக விரிவுபடுத்துவோம்!**

**மக்கள் கலை இலக்கியக்கழகம்**
**புரட்சிகர மாணவர்–இளைஞர் முன்னணி**
திருச்சி மாவட்டம்
f rsyftn2021
தொடர்புக்கு:
99448 47888
80569 05898